# கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்



இரண்டு பாகங்களடங்கிய ‘ விடுதலை வேள்வியில் தமிழகம் ’ என்ற நூல் அச்சானவுடன் அதற்கு ‘ அணிந்துரை ’ எழுதியவர் என்ற முறையில் அதன் முதல்பிரதியை அன்றைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை அவரது சென்னை - கோபாலபுரம் இல்லத்தில் 28.02.2001 ஆம் தேதி சந்தித்து வழங்கியபோது எடுத்த படம். அருகில் தமிழக சட்டப் பேரவை உறுப்பினர் திருப்பூர் கே.சுப்பராயன் உள்ளார்.

கலைஞர் அவர்களை அவரது கோபாலபுரம் இல்லத்தில் ஐந்து முறை சந்தித்து பேசும் வாய்ப்புக் கிடைக்கப்பெற்றது. ‘ விடுதலை வேள்வியில் தமிழகம் ’ நூலிற்கு அணிந்துரை கேட்பதற்காகச் சந்தித்தபோது அவருடன் மட்டும் தனியாக நீண்ட நேரம் உரையாடுகிற வாய்ப்பும் கிடைத்தது. அவர் பேசிய நான்கு கூட்டங்களில் பேசியுள்ளோம்.